DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C. No.129/2022

Prosecution side witness for P.W.7

| | | | |
|---|---|---|---|
| Name | ...திரு. முருகராஜ் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **16.07.2025.**

Accused is absent, U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

முதல்விசாரணை:–

நான் தற்போது துாத்துக்குடி மாவட்டம், ஆழ்வார்திருநகரி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். 2018 ஆம் வருடம் துாத்துக்குடி மாவட்டம் கொப்பம்பட்டி காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வந்தேன். அப்போது என் காவலர் எண்.1987 ஆகும். கடந்த 06.01.2018 ஆம் தேதி காலை 10.00 மணியளவில் நானும், உதவி ஆய்வாளர் ஆர்தர் ஜெஸ்டின் சாமுவேல் என்பவரும் பணியில் இருந்தபோது திருநெல்வேலி மாநகர வெடிகுண்டு கண்டுபிடித்தல் மற்றும் அழித்தல் பிரிவு ஆய்வாளர் திரு.பால்ராஜ், மற்றும் தலைமை காவலர் திரு.பாலசுப்பிரமணியன் அவர்களும் கொப்பம்பட்டி காவல்நிலைய குற்ற எண். 85/2017 சட்டபிரிவுகள் 4(A) of 5 Explosive Act வழக்கு சொத்தான 2 நாட்டு எறிவெடிகுண்டுகளை செயல் இழப்பது சம்மந்தமாக கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 கோவில்பட்டி அவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற கடித எண்.3138/2017 உத்தரவின்பேரிலும், திருநெல்வேலி மாநகர ஆணையரகத்திலிருந்து கிடைக்கபெற்ற உத்தரவின்பேரிலும் நிலையம் ஆஜரானார்கள். ஆய்வாளர் திரு.பால்ராஜ் அவர்களிடம் செயலிழக்க செய்ய கோவில்பட்டி மேற்கு வட்ட காவல் ஆய்வாளர் திரு.விநாயகம் அவர்களின் வாய்மொழி உத்தரவின்பேரிலும், நிலைய பொறுப்பில் இருந்த நானும், உதவி ஆய்வாளர் ஆர்தர் ஜெஸ்டின் சாமுவேல்ராஜ் ஆகியோரும் கொப்பம்பட்டி காவல்நிலையத்தில் பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்த இவ்வழக்கின் சொத்தான 2 நாட்டு எறிவெடிகுண்டுகளை செயலிழக்க செய்வதற்காக அவரிடம் ஆஜர் செய்தோம். அவர் நிலையத்திலிருந்து 1 கி.மீ தொலைவில் ஒதுக்குப்புறமாக உள்ள கிரண்டில் வைத்து அதை செயலிழக்க வைப்பதற்கு முன்பு 2 நாட்டு எறிவெடிகுண்டுகளையும் போட்டோ எடுத்துக்கொண்டார். அந்த புகைப்படம்

நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–10** ஆகும் (மேற்படி ஆவணத்தின் Primary evidence தாக்கல் செய்யாததால் குறியீடு செய்யக்கூடியதல்ல என்று எழுப்பப்பட்ட ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). மேலும் 2 நாட்டு எறிவெடிகுண்டுகளையும் செயலிழக்க செய்வதற்கு முன்பு அந்த இடத்தில் உள்ள மண்ணை மாதிரிக்கு சுமார் 5 கிராம் எடுத்துக்கொண்டார்கள். அதன்பின் திருநெல்வேலி மாநகர வெடிகுண்டு கண்டுபிடித்தல் மற்றும் அழித்தல் காவல் ஆய்வாளர் பால்ராஜ் 2 நாட்டு எறிவெடிகுண்டுகளையும் செயலிழக்க செய்தார். செயலிழக்க செய்தபின்பு செயலிழக்க செய்த இடத்திலிருந்து மாதிரிக்காக மண் 5 கிராம் எடுத்துக்கொண்டார்கள். அதன்பின்பு 2 நாட்டு எறிவெடிகுண்டுகளையும் செயலிழக்க செய்வதற்கு முன்பு எடுக்கப்பட்ட புகைப்படம், 2 நாட்டு எறிவெடிகுண்டுகளையும் செயலிழக்க செய்வதற்கு முன்பு எடுக்கப்பட்ட மாதிரி மண் 5 கிராம், 2 நாட்டு எறிவெடிகுண்டுகளையும் செயலிழக்க செய்தபின்பு எடுக்கப்பட்ட மண் 5 கிராம் ஆகியவற்றை தனித்தனியாக பாலீதின் கவரில் போட்டு நீதிமன்றம் மூலமாக வேதியல் பகுப்பாய்வு செய்வதற்காக ஆய்வகத்திற்கு ஆய்வு செய்ய அனுப்ப வேண்டி என் வசம் ஒப்படைத்தார்கள். அதற்கான சான்று அறிக்கை என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–11** ஆகும். நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் 2 நாட்டு எறிவெடிகுண்டுகளையும் செயலிழக்க செய்வதற்கு முன்பு எடுக்கப்பட்ட மாதிரி மண் 5 கிராம் **அ.சா.பொ.1** ஆகும். நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் 2 நாட்டு எறிவெடிகுண்டுகளையும் செயலிழக்க செய்தபின்பு அந்த இடத்தில் எடுக்கப்பட்ட மண் 5 கிராம் **அ.சா.பொ.2** ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக கோவில்பட்டி மேற்கு வட்ட காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்குவிசாரணை (எதிரிதரப்பில்)

ஆய்வாளர் என்னை விசாரிக்கும்போது வெடிகுண்டுகள் செயலிழப்பு ஆய்வாளர் பால்ராஜ் அ.சா.ஆ–11 அறிக்கை சான்று கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். புகைப்படம் யாருடைய புகைப்பட கருவியிலிருந்து எடுக்கப்பட்டது என்றால் நினைவில்லை. அ.சா.ஆ–11 ம், புகைப்படமும், அ.சா.பொ.1, 2 மண் செயலிழக்கம் செய்யப்பட்ட இடத்திலிருந்தே என்னிடம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். 06.01.2018 ஆம் தேதி கொப்பம்பட்டி காவல்நிலையத்தில் ரோல்ஹால் யார் எடுத்தார்கள் என்றால் உதவி ஆய்வாளர் அ.சா.1 ஆர்தர் ஜெஸ்டின் சாமுவேல். அன்றையதினம் ரோல்ஹால் எடுக்கும்போது ஒவ்வொரு காவலருக்கும் ஒதுக்கப்படும் பணிக்குறித்து ரோல்ஹாலில் திட்டமிடப்படும் என்றால் சரிதான். நான் அன்றையதினம் ரோல்ஹாலில் இருந்தேனா என்றால் இருந்தேன். அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும் பணியை பொது நாட்குறிப்பில் எழுத வேண்டும் என்றால் சரிதான். 06.01.2018 அன்று நான் செய்த பணி ரோல்ஹாலில் ஒதுக்கீடு செய்யப்பட்டு பொதுநாட்குறிப்பில் எழுதப்படவில்லை என்றால் நினைவில்லை. கொப்பம்பட்டி காவல்நிலைய குற்ற எண். 85/2017 சட்டபிரிவு 4(A) 5 Explosive

Act கீழ் பதிவுசெய்யப்பட்ட இந்த வழக்கில் வெடிகுண்டு செயலிழப்பு செய்வதற்கு முன்பு ஆய்வாளர் பால்ராஜ் வந்தது, வெடிகுண்டை புகைப்படம் எடுத்தது, அறிக்கை தாக்கல் செய்தது, நான் உடன் இருந்தது ஆகிய விவரங்கள் எதுவும் பொது நாட்குறிப்பில் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு பாக்கெட் நோட்புக் உண்டு என்றால் சரிதான். அந்த நோட்புக்கில் நான் அன்றைய தினம் செய்யும் பணிகளை எழுதி ஆய்வின்போது சமர்ப்பிக்க வேண்டும் என்றால் சரிதான். 06.01.2018 அன்று நான் மேற்கொண்ட பணிகள் எதுவும் பாக்கெட் நோட்டில் துலங்காது என்றால் சரியல்ல. நான் எழுதினேன். ஆய்வாளர் விசாரிக்கும்போது பாக்கெட் நோட்டை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. செயலிழக்கம் செய்யப்பட்ட வெடிகுண்டுகள் எந்த முறைப்படி செயலிழக்கம் செய்யப்பட்டது என்று தெரியாது என்றால் சரிதான். வெடிகுண்டுகள் செயலிழக்கம் செய்யும்போது செயலிழக்கம் செய்வதற்கு முன்பு ஜாபிதாவும், செயலிழக்கம் செய்தபின்பு ஒரு ஜாபிதாவும் தயார் செய்து யார் முன்பு செயலிழக்கம் செய்யப்படுகிறதோ அவர்களிடம் கையொப்பம் பெறப்படுவது நடைமுறை என்றால் சரிதான். இந்த வழக்கில் அப்படி செயலிழக்கம் செய்வதற்கு முன்பும் செயலிழக்கம் செய்வதற்கு பின்பும் ஜாபிதா தயார் செய்யப்பட்டதா என்றால் தயார் செய்யப்பட்டது. மேற்படி 2 ஜாபிதாக்களிலும் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். என்னுடன் சேர்த்து யார் கையொப்பம் செய்தார்கள் என்றால் நானும், உதவி ஆய்வாளர் ஆர்தர் ஜெஸ்டின் சாமுவேலும் கையெழுத்து செய்தோம். வேறு யார் அதில் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி ஜாபிதாவை யார் தயார் செய்தார் என்றால் ஆய்வாளர் பால்ராஜ் தயார் செய்தார். அவையும் காவல்நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது என்றால் இல்லை. அது யார் வசம் உள்ளது என்றால் தெரியாது. செயலிழக்கம் செய்யப்பட்ட வெடிகுண்டுகளின் மீதம், அறிக்கை, யார் முன்பு செயலிழக்கம் செய்யப்பட்டதோ அவர்களின் கையொப்பம் எல்லாம் பெற்று Controller of explosive, Chennai அவர்களுக்கு அனுப்பப்படும் என்றால் தெரியாது. இந்த வழக்கில் Controller of explosive, Chennai அவர்களுக்கு அறிக்கை அனுப்புவதற்கு என்னிடம் கையொப்பம் எதுவும் பெறப்பட்டதா என்றால் இல்லை. எங்கள் காவல்நிலையத்தில் வெடிகுண்டுகளை பாதுகாக்கின்ற அறைகள் எதுவும் கிடையாது என்றால் சரிதான். 5 கிராம் எடுத்த மாதிரி மண்ணை என்னிடம் ஒப்படைப்பதற்கு முன்பே பொதிந்து சீல் வைத்து என்னிடம் ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ–11 அறிக்கையில் ஆய்வாளர் பால்ராஜ் அவர்களால் அ.சா.பொ.1,2 மாதிரிகளை பொதிந்து தனியாக முத்திரையிட்டு என்னிடம் ஒப்படைத்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் 06.01.2018 அன்று 10.00 மணிக்கு வெடிகுண்டுகள் கண்டுபிடித்தல் மற்றும் அழித்தல் ஆய்வாளர் பால்ராஜ் தலைமை காவலருடன் நிலையம் வந்ததாக சொல்வதும், குற்ற எண். 85/2017 சட்டபிரிவுகள் 4(A) 5 of Explosive Act வழக்கில் தொடர்புடையதாக சொல்லக்கூடிய 2 வெடிகுண்டுகளை நான் ஒப்படைத்ததாக சொல்வதும்,

அவைகள் புகைப்படம் எடுக்கப்பட்டு செயலிழக்கம் செய்யப்பட்டதாக சொல்வதும், செயலிழக்கம் செய்வதற்கு முன்பும், பின்பும் 5 கிராம் மாதிரி மண் சேகரிக்கப்பட்டதாக சொல்வதும் அதற்காக ஆய்வாளர் பால்ராஜ், அ.சா.ஆ–11 சான்று தயாரித்ததாக சொல்வதும், மேற்படி சான்றுடன் புகைப்படம், அ.சா.பொ.1,2 பொருட்களை ஒப்படைத்ததாக சொல்வதும் உண்மையல்ல என்றுசொன்னால் சரியல்ல. நான் உண்மைக்கு மாறாக காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க முதல் விசாரணையில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.